| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>மோகன் | EP.11/2022 | 10.01.2024 |

**PW2– குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

புல எண்.304/20C க்கு நேர் தென்புறத்தில் புல எண்.304/21 அதற்கு தென்புறம் புல எண்.304/23. புல எண்.304/23 க்கு தென்புறம் தான் திருமழப்பாடி ரோடு உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.1ல் உள்ள புலவரைபடம் 304 ஆனது 1994 ல் ஏற்படுத்தப்பட்டது. புல எண்.304/20A, 20B, 20C என உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது 2008 ம் ஆண்டு. 2008 ல் உட்பிரிவு செய்யப்பட்டதில் அளவுகளில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. புல எண்.304/20B ஆனது வருவாய் ஆவணங்களின் படி பொதுப்பாதையாகும். ஆனால் அந்த பாதை பொதுமக்களுக்கான பாதை அல்ல. புல எண்.304/20B மற்றும் 304/20C க்கான உரிமையாளர்களின் தனிப்பட்ட பாதையாகும். புல எண்.304/20B தென்வடல் அளவு கீழ்புறத்தில் 4 மீட்டர். மேல்புறத்தில் 3.6 மீட்டராகும். புல எண்.304/20B ல் மேற்சொன்ன அளவுகளை விட அதிகமாக அளவு இருந்ததாக காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்படும் ஏற்படும் ஆவணங்களில் ஏற்படும் தவறுகளை சரிசெய்ய அந்த ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்பே பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதாவது இருந்தால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் தான் அதை சரிசெய்ய இயலும் என்றால் சரிதான். புல எண்.304/20A ன் பட்டாதாரர் தணக்கப்புடையாரின் வாரிசுகள். இந்தவழக்கின் எதிர்மனுதாரர்கள் தணக்கப்புடையார் மகனின் வாரிசுகள் ஆவார்கள். புல எண்.304/20A க்கான பட்டாவை தணக்கப்புடையாரின் வாரிசுகள் பெற்றுவிட்டனர். பட்டாவை வாங்கிய பிறகு அளவுகளில் தவறு ஏதேனும்

இருப்பின் வருவாய் துறையில் 30 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும். மனுதாரர்கள் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் நில அளவையர் மூலமாக தளஆய்வு செய்து அதன் அடிப்படையில் தான் உட்பிரிவு செய்யப்பட்டது. புல எண்.304/20B ஆனது தணக்கப்புடையார் வாரிசுகள் மற்றும் மனுதாரர்கள் பெயரில் தான் கூட்டுப்பட்டாவாக உள்ளது.